# அரசு பொதுத் தேர்வு - 2025

வகுப்பு : 10 தமிழ் மதிப்பெண்கள் : 100

## விடைக்குறிப்பு

### பகுதி - I

15×1 = 15

1. ஆ. இன்மையிலும் விருந்து
2. இ. நடித்தல், நடிப்பு
3. இ. உருவகம்
4. அ. செய்பவர்
5. இ. வலிமையை நிலைநாட்டல்
6. ஈ. சருகும் சண்டும்
7. அ. கருணையன், எலிசபெத்துக்காக
8. ஆ. வினைத்தொகை
9. இ. தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
10. ஆ. பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
11. இ. மூன்று நாள்

விடை தருக:

12. ஆ. பரிபாடல்
13. அ. உருஅரி - உந்துவளி
14. ஈ. அடுக்குத்தொடர்
15. இ. கீரந்தையார்

<u>பகுதி - II</u>

விடை தருக: 4x2 = 8

16. இலைகள்.
உங்கள் கதை வாசகருக்கு மகிழ்ச்சி.
வந்து அவர்கள், திண்ணை சிறுவர்கள்.

17. வினா அமைக்க:
அ. புதிய படைப்புகள் உருவாக எது உதவுகிறது?
ஆ. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவர் யார்?

18. பாசவர் - வெற்றிலை விற்பவர்
வாசவர் - நறுமணப் பொருள்கள் விற்பவர்
பல்நிண விலைஞர் - பலவகையான இறைச்சிகள் விற்பவர்
உமணர் - உப்பு விற்கும் வணிகர்.

19. பிறருக்கு உதவி செய்யாததால் எவராலும் விரும்பப்படாதவர் என்பதாகும்.

20. அறம் கூறும் மன்றங்களே அவையம் எனப்பட்டது. அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் அறக்கண்ட நெறிமான அவையம் என்கிறது புறநானூறு.

21. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்.

## பகுதி - 2.

**விடையளிக்கவும்:**

5×2 = 10

22. அறியா வினா, ஐய வினா.

23. அ. ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

ஆ. பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தவர் போட்டித் தேர்வில் வென்றார்.

24. **பகுபத உறுப்பிலக்கணம்:**

கிளர்ந்த - கிளர் + த் (ந்) + த் + அ

கிளர் - பகுதி

த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

அ - பெயரெச்ச விகுதி.

25. **கலைச்சொல்:**

அ. செவ்விலக்கியம்

ஆ. சின்னம்.

26. அ) நாம் கண்ணும் கருத்துமாகப் படிக்க வேண்டும்.

ஆ) நாம் வீணாக பணத்தை அள்ளி இறைத்தல் கூடாது.

27. தீவக அணி மூன்று வகைப்படும். அவை,

1. முதல்நிலைத் தீவகம்
2. இடைநிலைத் தீவகம்
3. கடைநிலைத் தீவகம்.

28. அ. ஆண் மீன்

ஆ. காடு.

## பகுதி - III

2 x 3 = 6

29. நீ எதிர்காலத் தொழில்நுட்பத்தை மனிதனும் சரியான முறையில் பயன்படுத்தினால் அவை மனித இனத்தை மேம்படுத்திக் கொள்ள உதவும்.

i) திறன்பேசியிலுள்ள வழிகாட்டி வரைபடம் போக்குவரத்து நெரிசலை அறிய உதவுகிறது.

ii) கண் அறுவை மருத்துவம் செய்கிறது.

iii) சமைக்கிறது.

30. அ. சிலம்புச் செல்வர் ம.பொ.சி

ஆ. இளங்கோ தந்த சிலம்பு. தமிழினத்தின் பொதுச் சொத்து.

இ. சிலப்பதிகாரம், கம்பராமாயணம்.

31. சோலைக் காற்று : வணக்கம் நண்பா, நலமா?

மின்விசிறிக் காற்று : மகிழ்ச்சி நண்பா. நலம்.

சோலைக் காற்று : இயற்கையான காற்று நான்!

மின்விசிறிக் காற்று : மின்சாரத்தால் இயங்கும் இயந்திரக் காற்று நான்!

சோலைக் காற்று : எனக்கு எல்லை இல்லை!

மின்விசிறிக் காற்று : அறைக்குள் மட்டுமே நான்.

32. உவமை : 2 × 3 = 6

மருத்துவர், பிணியாளருக்குக் ரணம் தர எவ்வளவு துன்பம் தந்தாலும், அது நன்மைக்கே என்ற நம்பிக்கையால் பிணியாளர் மருத்துவரை அன்பு செய்வது போல.

விளக்கம் :

உனது விளையாட்டால் துன்பம் தந்தாலும் உன் அருளையே எப்போதும் எதிர்பார்ப்பேன்.

இறைவனுடைய அடியவனாகக் குலசேகராழ்வார் இவ்வாறாகக் கூறுகிறார்.

33. வளர் தண்ணீர், சாயக்குவளை, கந்தைத்துணி, கட்டைத் தார்கை - "அறப்பணி ஓய்வதில்லை. ஓய்ந்திடில் உலகமில்லை!" என்பதாகும்.

34. அ) வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ
ஐயோ இவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்.

ஆ) அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

## பகுதி - 3

2 × 3 = 6

**விடையளி:**

35. மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடி போருக்குச் செல்வது வஞ்சித்திணை ஆகும்.

36. நிரல் நிறை அணி - சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை அணி எனப்படும்.

37.

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| நாள்/தொறும் | நேர் நிறை | கூவிளம் |
| நா/டி | நேர் நேர் | தேமா |
| முறை/செய்யா | நிறை நேர் நேர் | புளிமாங்காய் |
| மன்/னவன் | நேர் நிறை | கூவிளம் |
| நாள்/தொறும் | நேர் நிறை | கூவிளம் |
| நா/டு | நேர் நேர் | தேமா |
| கெடும் | நிறை | மலர். |

இக்குறள் 'மலர்' என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

## பகுதி - IV.

விடையளி!

38. அ. நன்னனைப் பாடி பரிசில் பெற்ற கூத்தர், பரிசில் பெறப் போகும் கூத்தரைக் கானவர்களின் வளம் நிறைந்த புதுவருவாயை உடைய ஊர்களில் தங்கி உணவு பெறுவதற்கு வழிப்படுத்துதல் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆ) ஒரு செயலைச் செய்வதற்குரிய முறைகளை நூல் வழியாக அறிந்திருப்பினும், உலகியல் நடைமுறைகளை அறிந்து நாமும் செயல்பட வேண்டும்.

நமக்கு நுண்ணறிவும் - நூலறிவும் இருந்தால், எந்தச் சூழ்ச்சியையும் நாம் வெல்லலாம்.

39. அ / ஆ }. அனுப்புநர், பெறுநர், பொருள், இப்படிக்கு, உறைமேல் முகவரி ஆகியவற்றைக் கொண்டு கடிதம் எழுதி இருக்க வேண்டும்.

40. காட்சிக்கு ஏற்றாற்போல் கவிதை எழுதியிருக்க வேண்டும். அக்கவிதைக்கு தலைப்பு அமைந்திருத்தல் வேண்டும்.

41. கொடுக்கப்பட்ட விவரங்களைக் கொண்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணையர் விருப்பப் படிவத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டும்

42. அ. பிறர் மனம் மகிழும்

அறம் வளரும்

புகழ் பெருகும்

நல்ல நண்பர்கள் சேருவர்

அன்பு சூழும்.

ஆ, மொழிபெயர்க்க:

i, கல்வி என்பது ஒருவரால் மறக்கப்பட்டதும் பள்ளியில் ஒருவரால் கற்கப்படுவதுமே.

ii) நாளை என்பது இந்த வாரத்தின் மிகவும் பரபரப்பான நாளாகும்.

iii) நம் வாழ்வின் இருளான சமயங்களில் தான் ஒளியை நோக்கி முனைந்து பார்க்க வேண்டும்.

iv. வெற்றி என்பது இறுதியானதல்ல; தோல்வியானது உயிரால் ஏற்படுவதல்ல. அது தொடர்ந்து பயணிப்பத் துணிவைத் தருவது ஆகும்.

v, மொழி நாகரிகத்தைக் காட்டுகின்ற வழி: அது மக்களை எங்கிருந்து வந்தார்கள்; எங்கே செல்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தும்.

## பகுதி - V

விடையளிக்க: $3 \times 8 = 24$

43. அ. குறிப்புச்சட்டகம்:

முன்னுரை
போராட்டக் கலைஞர்
பேச்சுக் கலைஞர்
நாடகக் கலைஞர்
திரைக்கலைஞர்
இயற்றமிழ்க் கலைஞர்
முடிவுரை.

**முன்னுரை:**

முத்தமிழிலும் தன் முத்திரை பதித்தவர் கலைஞர்.

**போராட்டக் கலைஞர்:**

கலைஞர் போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் ஆவார்.

**பேச்சுக் கலைஞர்:**

பெரியார், அழகிரி, அறிஞர் அண்ணா ஆகியோரின் பேச்சாற்றலால் கவரப்பட்டவர்.

**நாடகக் கலைஞர்**

தூக்குமேடை நாடகத்தில் மாணவர் தலைவராகக் கலைந்து நடித்தமையைப் பாராட்டி 'கலைஞர்' என்ற பெ
பெற்றார்.

திரைக் கலைஞர்:

காலத்தால் மறக்க முடியாத பல திரைப்படப் பாடல்களையும் எழுதியுள்ளார்.

இயற்றமிழ்க் கலைஞர்

பழந்தமிழ் இலக்கியங்களுக்கு உரையும் எழுதியுள்ளார்.

முடிவுரை:

தமிழர், தமிழ்நாடு என்ற சிந்தனையாலேயே தம் ஆயுளைச் செலவிட்டவர்.

---

ஆ) முன்னுரை

தமிழின் சொல்வளம்

புதிய சொல்லாக்கத்திற்கான தேவை

முடிவுரை

ஆகிய தலைப்புகளைக் கொண்டு கருத்துகள் சேர்த்து எழுதியிருந்தால் மதிப்பெண் வழங்கப்பட வேண்டும்.

44) அ) குறிப்புச் சட்டகம்

முன்னுரை

மேரி குடும்பம்

பறிக்கப்பட்ட புத்தகம்

கற்கை நன்றே

முடிவுரை

முன்னுரை:

வாழ்க்கையில் கல்விச் சுவரை ஏற்றிய கதையைப் பற்றிய கருத்துகளை இக்கட்டுரையில் காண்போம்.

மேரி குடும்பம்:

கருப்பர் இனப்பெண்

கல்வியறிவில்லாத குடும்பம்

பறிக்கப்பட்ட புத்தகம்:

தாயுடன் வில்சன் என்பவரின் வீட்டிற்குச் செல்கிறாள்.

வில்சன் மகள் புத்தகத்தைப் பறிக்கிறாள்.

உனக்குப் 'படிக்கத் தெரியாது' என்கிறாள்.

கற்கை நன்றே:

வெள்ளைக்காரப் பெண்மணி, கருப்பு இனப்பெண்ணை மேரிக்குப் படிக்க உதவ செய்கிறாள்.

முடிவுரை:

படிக்கும் ஆர்வம் இருந்தால் எதையும் செய்யலாம் என்பதை மேரியின் வாழ்க்கை உணர்த்துகிறது.

---

ஆ) கடின உழைப்பாளர் - சிறப்புமிக்கவர் - போன்ற தலைப்புகள் கொண்டு [illegible] தொடர்பான செய்திகளை தொகுத்து எழுதி இருக்க வேண்டும்.

45) அ. ஆ.

முன்னுரை

தலைப்புகள்

உட்தலைப்புகள்

முடிவுரை

ஆகிய தலைப்புகளைக் கொண்டு குறிப்புச் சட்டகம் இட்டு எழுதி இருக்க வேண்டும்.

தலைப்புக்கு ஏற்றாற்போல கருத்துகள் இருத்தல் வேண்டும்.

---


க. சரவணன்,
பட்டதாரி தமிழாசிரியர்.
9025544759.

ப. இராஜகோபால்,
பட்டதாரி தமிழாசிரியர்,
8675459028.

பொ. முத்துச்செல்வி,
பட்டதாரி தமிழாசிரியை,
மு. மு. மேல்நிலைப் பள்ளி,
திருநகர், மதுரை.
6374265407.



28/03/25
P. ANAND, M.A., M.Ed., DCA.
HEAD MASTER
Muthuthevar Mukkulathor Hr. Sec. School
Thirunagar, MADURAI - 625 006